பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 21 திங்கட்கிழமை 06.09.2021 கதிர் 169

## முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த பெண் இராமேஸ்வரத்தில் கைது

(ரு.லோகதயாளன்)

சட்டவிரோதமாக இலங்கை வர முயன்ற பெண் ஒருவர் இராமேஸ்வரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் சட்டவிரோதமாக படகு மூலம் தனுஷ்கோடி வழியாக இலங்கைக்குப் பயணிக்க முயன்றபோது, கடலோர காவற் 2

## நெல்லியடியில் மக்களைத் திரட்டி பண உதவி வழங்கிய மூவர் கைது



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்கு விதிமுறைகளை மீறி அதிகளவான மக்களை அழைத்து பண உதவி வழங்கிய குற்றச்சாட்டில் மூவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இன்று முற்பகல் வதிரி, இரும்பு மதவடியில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இந்தப் பண உதவி வழங்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்ட நிலையில் நூற்றுக்கணக்கானோர் வரிசையில் திரண்டனர். 2

## வலி. கிழக்கு தவிசாளருக்கு கொரோனாத் தொற்று உறுதி



(இ.கலையமுதன்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

அவரின் உடல் நிலையில் மாற்றம் உணரப்பட்டதையடுத்து நேற்று மாலை கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்புகொண்டு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 2

# கபட நோக்கத்துடனேயே அவசரகால நிலை அமுல்

## கோட்டாவின் திட்டத்தை சபையில் புட்டுவைத்தார் சுமந்திரன் எம்.பி.



**கபட எண்ணத்துடனேயே அவசரகால நிலையை வர்த்தமானி ஊடாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். அதன் கீழே அவசரகாலச் சட்ட விதிகளை ஜனாதிபதியால் இரவோடு இரவாக கொண்டுவரமுடியும். அதை இந்த நாடாளுமன்றம் கேள்விக்குட்படுத்த முடியாது.**

**இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.** 2



## பிரபல பாடகர் காலமானார்!

இலங்கையின் பிரபல பாடகர் சுனில் பெரேரா (வயது 69) இன்று காலை காலமானார். 2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 273 பேர் கைது

*நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று 273 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*அத்துடன் 53 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கமைய இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 66 ஆயிரத்து 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்* 2

## மூன்றரை வயது பெண் குழந்தை கொரோனாத் தொற்றால் மரணம்

மூன்றரை வயது பெண் குழந்தை ஒன்று கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளது.

அம்பலாங்கொடை, தேவகொட பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த குழந்தை லியுகேமியா நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே கொரோனாத் தொற்றுக்கும் உள்ளாகியுள்ளது.

குழந்தையின் இறுதி 2

## யாழ்ப்பாணத்தில் மாறி எரிக்கப்பட்ட சடலத்தின் அஸ்தியைத் தாருங்கள்!

### வைத்தியசாலை நிர்வாகத்திடம் உறவினர்கள் கோரிக்கை

(ரு.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த ஒருவரின் சடலத்துக்கு வேறு ஒருவரின் உடல் கையளிக்கப்பட்டுதகனம் இடம்பெற்றதால் அதன் அஸ்தியைத் தருமாறு போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் உறவினர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம், கொக்குவில் - செம்பியன் லேன் பகுதியைச் சேர்ந்த சைவ மதகுரு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவரின் உடல் தகனத்துக்காகக் கடந்த 5ஆம் திகதி காலை வவுனியாவுக்கு எடுத்துச் 2

## ரிஷாத் உள்ளிட்ட மூவருக்கும் செப். 17 வரை மறியல் நீடிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத்பதியுதீன், அவரதுமனைவி மற்றும் மாமனார் ஆகியோரின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் இன்று ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த ஹிஷாலினி என்ற 16 வயது சிறுமி எரிகாயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் மற்றும் சிறுமியை பணிக்கமர்த்திய தரகர் ஆகிய இருவரும் பிணையில் 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## முள்ளிவாய்க்காலைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சென்னை - வேளச்சேரியில் தங்கியிருந்த குறித்த பெண் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட இலங்கைப் பெண் இராமேஸ்வரம் கரையோர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## மூன்றரை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிரியைகள் காலி, தடெல்ல தகன சாலையில் இடம்பெற்றுள்ளது.

## பிரபல......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிமோனியா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் அவர் காலமானார்.

கடந்த மாதம் சுனில் பெரேராவுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது.

எனினும், சிகிச்சையின் பின்னர் அவர், வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்த நிலையில் நிமோனியா காரணமாக நேற்று மீண்டும் சேர்க்கப்பட்டார்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல பாடல்களை சுனில் பெரேராபாடியுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

## வலி.கிழக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சோதனையில் அவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அவர் குடும்பத்துடன் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

## நெல்லியடியில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவம் தொடர்பில் அறிந்த நெல்லியடி பொலிஸார், அங்கு சென்று பண உதவி வழங்கியவர் உட்பட மூவரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றனர்.

## தனிமைப்படுத்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## றிஷாத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்லப்பட்டபோது உடல் தமது உறவினரது அல்ல எனத் தெரிவித்து அவரது குடும்பத்தினர் நேற்று மதியம் மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட உடல் மூடி பொதி செய்யப்பட்டுள்ள நிலையில் உங்கள் உறவினர் உடல் அல்ல என எவ்வாறு கண்டுகொண்டீர்கள் என வைத்தியசாலை நிர்வாகம் வினாவிய போது உயிரிழந்தவரின் உறவுகள் கூறிய விடயம் வைத்தியசாலை வட்டாரத்தையே உலுக்கி விட்டது.

உயிரிழந்தவரின் ஒரு கையில் விரல் கிடையாது எனவும், ஆனால் இந்தப் பொதியில் உள்ள உடலத்தின் கையில் அத்தனை விரல்களும் தென்படுகின்ற காரணத்தால் நிச்சயமாக இது எமது உறவு அல்ல என அவர்கள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து வைத்தியசாலைத் தரப்பு ஆராய்ந்தபோது உடல் மாறியிருந்தமை உறுதி செய்யப்பட்டது. இதனால் உரிய உடலை வைத்தியசாலையில் தேடியபோது வைத்தியசாலை நிர்வாகத்துக்கு மேலும் அதிர்ச்சி காத்திருந்தது.

அதாவது உயிரிழந்தவர் இருவருமே பூசகர்கள் என்ற வகையில் உடலம் மாறிக் கையளிக்கப்பட்டதால் ஏற்கனவே உடலத்தை மாறி எடுத்துச் சென்றவர்கள் தகனம் செய்து விட்டனர். இதனால் தகனம் செய்த சாம்பலையேனும் தாருங்கள் என வைத்தியசாலை நிர்வாகத்திடம் உறவினர்கள் கோரி நிற்கின்றனர்.

## கபட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை தொடர்பில் இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைக்கு இந்த நாடாளுமன்றத்திலே அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதை ஆதரிக்குமாறு, அதற்கு இணங்குமாறு ஒரு கோரிக்கை இடப்படுகின்றது. உணவு விநியோகம், விலைவாசி அதிகரிப்பு என்பவை எங்களுக்கும் ஒரு பாரிய பிரச்சினை. ஆனால், அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தித்தான் இதைக் கட்டுப்படுத்த முடியுமா என்ற கேள்வியைக் கேட்டால் இல்லை என்ற பதில் தான் சொல்ல வேண்டுமே தவிர வேறு ஏதும் பதில் கிடையாது.

ஏனென்றால் உணவுப்பொருள்களின் விலைவாசி அதிகரிப்பு உணவுப் பொருள்களை பதுக்கி வைக்கின்றமை, உணவுப் பொருள்களை விற்காமல் தடுப்பது அல்லது மறுப்பது இவற்றை எல்லாம் வேறு சாதாரண சட்டங்களின் கீழே செய்யப்பட முடியும். அதற்கான பிரிவுகளை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதற்கான சட்ட திட்டங்கள் நாட்டிலே ஏற்கனவே அமுலில் இருக்கின்றன.

அத்தியாவசிய சேவைகள் என்று சொல்லி ஏதாவது ஒரு சேவையை பிரகடனப்படுத்த வேண்டுமாக இருந்தால் அதற்கென்று ஒரு சட்டமே இருக்கின்றது. அதன் கீழே பிரகடனப்படுத்தலாம், நாளைக்கு அந்தப் பிரகடனம் ஒன்று நாடாளுமன்றத்துக்கு வருகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழேயே 17ஆவது பிரிவிலே, அதற்கான இடமிருக்கின்றது. 17ஆவது பிரிவு பாகம் 3 இலே இருக்கின்றது. பாகம் இரண்டை நடைமுறைக்குக் கொண்டு வருகின்ற போதுதான் நாடு அவசரகால நிலைக்குள்ளே தள்ளப்படுகின்றது. அப்படி செய்யாமல் அதற்கு அடுத்த பாகத்திலே இருக்கின்ற இதற்கென்று விசேடமாக கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை ஜனாதிபதி உபயோகித்திருக்கலாம்.

நாட்டை அவசரகால சூழலுக்குள்ளே கொண்டுவருவதற்கான உண்மையான நோக்கம், இப்படியாக ஓர் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி விட்டால், அதன் கீழே அவசரகாலச் சட்ட விதிகளை ஜனாதிபதியால் இரவோடு இரவாக கொண்டுவரமுடியும்.

அதை இந்த நாடாளுமன்றம் கேள்விக்குட்படுத்த முடியாது. இந்த நாடாளுமன்றத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடமை மாதத்துக்கு மாதம் அவசரகால நிலையை நீடிப்பதை அனுமதிப்பதா? இல்லையா? என்ற கேள்வி மட்டும்தான்.

இந்த வர்த்தமானி பிரசுரத்திலே இதைச் சொல்லியிருக்கின்ற விதத்திலே ஒரு கபடமான எண்ணம் இருக்கின்றது. தெளிவாக எங்களுக்குத் தெரிகின்றது.

நாட்டிலே விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படவேண்டும் என்பது உண்மை. ஆனால், இதை இப்படியாகச் செய்வதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் இதனை எதிர்க்கின்றோம் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அடுத்த மாத முடிவில் மீட்சி?

நாட்டையே உலுக்கி வரும் கொரோனாப் பேரிடர் ஏற்கனவே பத்தாயிரம் பேரின் உயிரைக் காவு கொண்டு விட்டது. வேகமாக அந்தத் தொற்றுப் பரவி வருகின்றது.

நிலைமை நாடு முழுவதும் சமூகத் தொற்றாக வியாபித்து விட்டது என்பது புரிகின்றது. இதிலிருந்து எப்போது மீட்சி, அந்த மீட்சி வருமா என்ற அவலக் குரல்கள் கேட்கின்றன.

தடுப்பூசிகளைச் சுவீகரிப்பதில் காட்டிய காலதாமதமும் மெத்தனமும் மற்றும் பொது முடக்கத்தை அறிவித்து நடைமுறைப்படுத்துவதில் வெளிப்படுத்திய உறுதியின்மையுமே இன்றைய இந்தப் பேரவல நிலைக்குப் பிரதான காரணம் என்பது வெளிப்படையானது.

எனினும், காலம் பிந்தியாவது – சற்று தாமதமாகவேனும் தடுப்பூசிகளை நாட்டுக்குள் ஒருசேரக் கொண்டு வந்து குவிப்பதில் அரசு வெற்றி கண்டிருக்கின்றது. அதற்காக ஆட்சியாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே அத்தோடு இல்லை என்பதைவிட குறைந்தபட்சம் தாமதமாக கிடைக்கின்றது என்பது மேலானது அல்லவா?(Better late than never.)

தாமதமாக ஊசிகள் கிடைத்தாலும் அதன் பெறுபேற்றை அடுத்த ஒன்றரை மாத காலத்தில் – அதாவது ஒக்டோபர் மூன்றாம் வாரத்தில் – நாட்டு மக்கள் உணரக்கூடியதாக இருக்கும் என்கிறார் மருந்து வகைகளின் தயாரிப்பு, விநியோகம், கட்டுப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன.

முப்பது வயதுக்கு மேற்பட்டோருக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணி விரைவில் முடிவடைய இருக்கின்றது. 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டோருக்குத் தடுப்பு ஊசி ஏற்றும் பணி விரைந்து முன்னெடுக்கப்படுகின்றது. அவர்கள் தங்களது இரண்டாவது டோஸை ஒரு மாத காலத்தில் திரும்பவும் எடுப்பார்கள். ஆக அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் நாட்டில் கணிசமானோருக்கு இரண்டு தடுப்பூசிகளும் போடப்பட்டிருக்கும்.

அத்துடன் 20 வயதுக்கு குறைந்தோருக்கு இயல்பாகவே நோய் எதிர்ப்பு வலிமை இருக்கும் என்று கருதப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் அடுத்த மாதம் மூன்றாம் வாரத்துக்குப் பின்னர் நாட்டில் பெரும்பான்மையினர் தடுப்பூசி வலிமை பெற்று இருப்பார்கள் என்பது திண்ணம். அதன் விளைவை – திருப்தியான நிலைமையை – அடுத்த மாதம் மூன்றாம் வாரத்தில் இருந்து நாடும் மக்களும் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று உறுதி கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன.

தொற்றுப் பரவல் வீதம் குறையும். ஆள்களின் உயிர்களைக் காவு கொள்ளும் எண்ணிக்கை வீழ்ச்சியுறும் என்றெல்லாம் அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

சுமார் 2 கோடியே 20 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில் ஏற்கனவே ஒரு கோடிப் பேர் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டு விட்டனர் என்கின்றன அரசின் புள்ளிவிவரங்கள்.

பல்வேறு வேறு நோய்கள், உபாதைகள் கொண்ட 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் பலர் வாய்ப்புக் கிடைத்தும் தடுப்பூசிகளைப் பெறத் தவறிவிட்டனர். அதன் விளைவு தான் இப்போது தினசரி தொற்றுக்கு உள்ளாகி உயிரிழப்போரின் எண்ணிக்கை மோசமாக அதிகரித்தமைக்கு காரணம் என்று அமைச்சர் சன்ன ஜயசுமன கூறுவதில் நியாயம் இருப்பதாகவே படுகின்றது. தடுப்பூசி பெறுவது ஒன்றே இந்தக் கொரோனா பேரரக்கன் என்ற கொடூரனிடமிருந்து விடுபடுவதற்கு – தப்புவதற்கு – கிடைத்துள்ள ஒரே மார்க்கம்; சிறு துரும்பு. அதைச் சரிவரப் பற்றியாவது மீளுவதற்கு முயற்சிப்பது மட்டுமே நம் முன்னுள்ள ஒரே மார்க்கம்; தெரிவு. அதைப் புரிந்து கொண்டு நடப்பது நம் மக்களின் கடமையாகும்.

# நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சாவிலிருந்து தப்ப ஒரேவழி தடுப்பூசியே!

## பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு

தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் தடுப்பூசி ஏற்றுகை நடவடிக்கைகளின் பலன்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் உணர்ந்து கொள்ள முடியும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

20 முதல் 30 வயதுடையவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 30 வய துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றுகை நடவடிக்கை விரைவில் பூர்த்தியாகும்.

20 முதல் 30 வயதுடையவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டு வரும் நிலையில் ஒக்டோபர் மாதம் 3ஆம் வாரமளவில் பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிவிடும்.

60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் வேறு நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொண்டால் மேலும் பாதிப்புக்கள் ஏற்படும் என நினைத்து தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில்லை.

இவ்வாறானவர்கள் மரணத்திலிருந்து தப்புவதற்கான ஒரே வழி தடுப்பூசி ஏற்றுகையாகும் என பேராசிரியர் சன்ன ஜயசுமன அறிவித்துள்ளார்.

# உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள் தொடர்பில் மாற்றுத் தீர்மானம் இல்லை

## கல்வி அமைச்சு திட்டவட்டம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் இதுவரையில் மாற்று தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற கொவிட் நிலைமைக்கு மத்தியில் இந்த விடயம் தொடர்பாகக் கல்வி அமைச்சிலோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்திலோ அண்மையில் கலந்துரையாடல்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையை நவம்பர் மாதம் 14 ஆம் திகதியும் , உயர்தரப் பரீட்சைகளை நவம்பர் 15 முதல் டிசெம்பர் 10 வரை நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரருக்கு இம்முறை எளிமையாக மஹோற்சவ நிகழ்வுகள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான் - மட்டக்களப்பு)



மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற தேரோடும் ஆலயமான கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாட்டில் நிலவும் அதிகரித்த கொரோனாத் தொற்றுக் காரணமாக எந்தவொரு நிகழ்வுகளும் நடத்த முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் கொக்கட்டிச் சோலை ஆலய நிர்வாகம் விடுத்த மீள் பரிசீலனையின் நிமித்தம் 03-09-2021அன்று முடிவுகளின் படி நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பணியாள்கள் 15 பேர் மாத்திரம் ஆலயத்தினுள் உட் சென்று 08-09-2021 கொடியேற்றமும் ஸ்நபன கிரியைகளும் பூசைகளும் ஆலயத்தினுள் நடைபெற்று உள் வீதி திருவிழா மாத்திரம் வலம் வந்து 27-09-2021 நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வுகள் தேரோட்ட உற்சவ நிகழ்வாக அமையாது எனவும் நாட்டில் நிலவும் கொடிய கொரோனா நோய் தொற்று மற்றும் மரணங்களில் இருந்து மக்கள் விடுபட்டு நல் வாழ்வு வாழ்வதற்காகவும் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மக்களின் நலன் கருதி எவரும் எக்காரணம் கொண்டும் குறித்த ஆலய நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியாது எனவும், தங்களின் வீடுகளிலே இருந்து வழிபாடுகளை செய்யுமாறும் ஆலய நிர்வாக சபையினர் பொதுமக்களிடம் இறையன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

# கொரோனா பரிசோதனையில் மோதல் புத்தளம் வைத்தியசாலையில் பரபரப்பு

புத்தளம் ஆதார வைத்தியசாலையில் கொவிட் பரிசோதனை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட கைகலப்பு சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்கள்இருவரேஇவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் நேற்று கொவிட் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு வந்திருந்தபோது, தமது கைத்தொலைபேசியில் அங்கிருந்த நோயாளர் ஒருவரை படம்பிடிக்க முயன்றுள்ளனர்.

அவ்வேளையில் அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரி அவர்களைத் தடுக்க முயன்ற போது, இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில், வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் காயமடைந்த நிலையில் அதே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.



# போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தலிபான்களால் விரட்டியடிப்பு

ஆப்கானிஸ்தானில்புதிதாக அமைந்துள்ளதலிபான்களின் ஆட்சிக்கு எதிராகப் பெண்கள் அங்குள்ளபல்வேறுஇடங்களில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தலிபான்களின் ஆட்சியில் தங்களுக்குச் சம உரிமை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இரண்டாவது நாளாகப் பதாகைகளை ஏந்தியபடி பெண்கள் பேரணி சென்றனர். இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை தலைநகர் காபூலில்போராட்டம்நடத்தியபெண்கள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தினர்.பெண்கள்மீதுபுகைக்குண்டுகளை வீசி விரட்டியடித்தனர். அத்தோடு வங்கிகள், அலுவலகங்கள், ஊடகங்களில் பணிபுரியும் பெண்களை வீட்டிலேயே இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ள தலிபான்கள்; பெண் சமூக ஆர்வலர்களுக்கு மிரட்டல் விடுத்து வருகின்றனர் என்று அங்குள்ள பெண் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். அரசியலில் பெண்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று நடந்த போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களைக் குறிவைத்துத் தலிபான்கள் நடத்திய தாக்குதலில்; சமூக செயற்பாட்டாளரான நர்கிஸ் என்பவர் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளானார். பெண்களின் பேரணியை கலைப்பதற்கு வானை நோக்கி துப்பாக்கியால் தலிபான்கள் சுட்டனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இவற்றின்மூலம் தலிபான்களின் கோர முகம் தெரிய வந்துள்ளது என்று பெண்கள் மீதான தாக்குதல்களுக்கு ஆப்கானின் பெண்கள் நல அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. அத்தோடு காபூலைச் சேர்ந்த பெண் நீதிபதி ஒருவர் கூறும்போது, என்னால் தண்டிக்கப்பட்ட 4 பேர் எனது வீட்டுக்கு வந்து என்னை தேடியுள்ளனர். உயிருக்கு அஞ்சி தலைமறைவாக உள்ளேன்.

என்னைப் போன்று பல பெண் நீதிபதிகள் ஆங்காங்கே பதுங்கி வாழ்கின்றனர். தலிபான்களிடம் இருந்து எங்களைக் காப்பாற்ற உலக நாடுகள் முன்வர வேண்டும் – என்றுள்ளார்.

# கறுப்பின இகழ்ச்சி விவகாரம் காலில் விழுந்தது முகநூல்!




கறுப்பினத்தவர்களை இகழ்ச்சிக் குள்ளாக்கும் விதமாக நடந்துகொண்ட காரணத்தால் முகநூல் நிறுவனம் மன்னிப்புக்கோரிய சம்பவம் ஒன்று பிரிட்டனில் நடந்துள்ளது.

முகநூல் பாவனையாளர் ஒருவர் பிரிட்டனில் நடந்த கறுப்பின இளைஞர்கள் இடம் பெற்றிருந்த நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்க, அந்த நிகழ்ச்சி முடிவுறும் தருணத்தில்திரையில்தோன்றிய பரிந்துரையில் இதுபோன்று மேலும் சில விலங்குகளின் வீடியோக்களைப் பார்க்க விரும்புகிறீர்களா? என்று கோரப்பட்டுள்ளது. இதனால் கறுப்பின இளைஞர்களை விலங்குஎனஅடையாளப்படுத்தியதற்காக முகநூல் நிறுவனம் மன்னிப்பு கோரியது. இது குறித்து அந்த நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறும்போது, இது ஏற்கமுடியாத தவறு. இதற்குரிய செயலி நீக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையால் யாருடைய மனதாவது புண்பட்டிருந்தால் நாங்கள் வருந்துகிறோம். அந்த வசதியை மறு ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளோம். இதுபோன்று இனிமேலும் நடக்காமல் தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

# அமெரிக்காவில் நடந்த ஹெலிக்கொப்டர் விபத்தில் மாயமான ஐந்து மாலுமிகளும் உயிரிழந்துவிட்டனர்

அமெரிக்காவில் நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் மாயமான கடற்படையைச் சேர்ந்த 5 மாலுமிகள்உயிரிழந்துவிட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.



அந்நாட்டுவிமானம்தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ். ஆபிரஹாம் லிங்கன் கப்பலுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் கடந்த செவ்வாய்க்கிழமை கலிபோர்னியாவின் தெற்குப் பகுதியில் பசுபிக் கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, இயந்திரக் கோளாறு காரணமாக விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் 5 மாலுமிகள் மாயமாகினர்.

இந்நிலையில் காணாமல் போன 5 மாலுமிகளும் உயிரிழந்துள்ளனர் எனஅதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள் கூடி ஆலோசனை!

## பெண் நீதிபதிகளுக்கும் ஆபத்து



தலிபான்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய பெண்கள் மீது தலிபான்கள் ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ள நிலையில் ஆப்கான் தலைநகர் காபூலில் பெண் உரிமை ஆர்வலர்கள் ஒன்றுகூடி ஆலோசனை நடத்தினர். ஆட்சி, அதிகாரம் உட்பட அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு சமஉரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துவதாக அவர்களின் ஆலோசனை அமைந்தது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு சர்வதேச நீதிபதிகள் குழுவுடனும், சர்வதேச சமூக ஆர்வலர்களுடனும் ஒன்றிணைந்து ஆப்கானில் ஆபத்துக்குள்ளாகியுள்ள பெண் நீதிபதிகளை மீட்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளனர். அங்கு பெண் நீதிபதிகளுக்கு மட்டுமன்றி ஆப்கானிஸ்தான் பெண்களின் உரிமைக்காக போராடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமூக ஆர்வலர்களின் நிலைமையும் கேள்விக்குறியாக உள்ள நிலையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடந்துள்ளது.



# தலிபான்களின் வெற்றிக் கொண்டாட்டத்தால் 17பேர் பரிதாபகரமாகக் கொல்லப்பட்டனர்

தலிபான்களின் ஆட்சிக்கு எதிராகப் போராடிய பஞ்ச்ஷீர் பள்ளத்தாக்குப் பகுதிப் போராளிக்குழுக்களிடமிருந்து அந்தப் பகுதியை கைப்பற்றி விட்டோம் என்று அறிவித்த தலிபான்கள் அதைக் கொண்டாடும் மகிழ்ச்சிப் பெருக்கில் வானை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இந்தத் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக்காகி 17 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

41 பேர் காயங்களுக்குள்ளாகினர். இதையடுத்து வானத்தை நோக்கிச் சுட வேண்டாம், கடவுளுக்கு நன்றி மட்டும் சொல்லுங்கள் போதும் என்று தலிபான் ஆயுததாரிகளுக்குத் தலிபான்களின் தலைமை அறிவிப்பு விடுத்துள்ளது. இந்த அறிவிப்பை தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகீத் விடுத்துள்ளார். பஞ்ஷிர் பள்ளத்தாக்கைத் தலிபான்கள் கைப்பற்றிவிட்டோம் எனக் கூறினாலும் அங்கு தொடர்ந்து பதற்றமான சூழலே நிலவுகின்றது என்று சில செய்திகள் தெரிவிக்கின்றன.

# பா.ஜ.கவைக் கண்டித்து தமிழகத்திலும் போராட்டம் தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் அறிவிப்பு




இந்தியாவில் ஆளும் மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து செப்டெம்பர் 20 ஆம் திகதி கண்டன போராட்டம் நடைபெறும் என்று தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் அறிவித்துள்ளன.

இது குறித்து கூட்டணிக் கட்சித் தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி தலைமையில் கடந்த 20ஆம் திகதி இந்திய அளவிலான எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்ற காணொலிக் கூட்டத்தில், வேளாண் சட்டங்கள், பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வு, பொருளாதார சீரழிவு, தனியார் மயமாக்கல், வேலை இல்லாத் திண்டாட்டம், பொதுத்துறை நிறுவனங்களை விற்பது, பிகாசஸ் ஒட்டுக் கேட்பு உள்ளிட்ட மத்திய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து நாடு முழுவதும் செப்டெம்பர் 20 முதல் 30 ஆம் திகதி வரை பல்வேறு போராட்டங்களை நடத்துவது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, மத்திய பா.ஜ.க. அரசின் செயல்பாடுகளைக் கண்டித்து தி.மு.க. தலைமையிலான அனைத்துக் கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் மாநிலம் முழுவதும் வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு தங்களின் இல்லம் முன்பு கறுப்புக் கொடியை ஏந்தி கண்டனப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்து போராடுவோம், மதச்சார்பற்ற –ஜனநாயக இந்தியக் குடியரசைப் பாதுகாப்போம், என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு மாப்பிள்ளை மோகத்தினால் லட்சக்கணக்கில் பணத்தை இழந்த பரிதாபம்

## திருமண இணையம் மூலம் மோசடி

சென்னை பெரம்பூரைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் திருமணத்துக்காக பிரபல திருமண இணையத்தளத்தில் கைப்பேசி எண் உள்ளிட்ட தனது விவரங்களைப் பதிவு செய்திருந்தார். இவருக்கும், இந்த இணையத் தளத்தில் நெதர்லாந்து நாட்டிலிருந்து டாக்டர் முகமது சலீம் என்ற பெயரில் பதிவு செய்திருந்த நபருக்கும் அறிமுகம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த, சென்னைப் பெண்ணிடம் மும்பையில் இருந்து பெண்ணொருவர் தொடர்பு கொண்டு, 'நெதர்லாந்து நாட்டில் இருந்து டாக்டர் முகமது சலீம் உங்களுக்கு பரிசுப்பொருள் பார்சல் அனுப்பி உள்ளார். அதனைப் பெற்றுக் கொள்வதற்கு ரூபா. 28,000 பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும்' என்று தெரிவித்துள்ளார். அந்தப் பெண்ணும் பரிசுப் பொதியைப் பெறும் ஆவலில் மும்பை பெண் அனுப்பிய வங்கிக் கணக்கில் உடனடியாக பணத்தைச் செலுத்தியிருக்கிறார்.

பின்னர், மும்பை பெண் மீண்டும் தொடர்புகொண்டு, 'உங்களுக்கு வந்துள்ள பார்சலை 'ஸ்கான்' செய்து பார்த்தபோது, அதில் வெளிநாட்டு நாணயத்தாள்கள் இருந்ததால் இதற்கு அபராதமாக ரூபா 77,000 மும், இந்த நாணயத்தாள்களை இந்திய ரூபாவாக மாற்றுவதற்கு ரூபா ஒரு லட்சமும் செலுத்த வேண்டும் என்று கூற, இந்தப் பெண்ணும் மறுப்பில்லாமல் பணத்தை மும்பைப் பெண் கொடுத்த வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார்.

மும்பைப்பெண் மீண்டும் தொடர்பு கொண்டு வங்கிக் கணக்கை புதுப்பிக்க ரூபா 95,000 கட்ட வேண்டும் என்று கேட்டபோது, சந்தேகமடைந்த சென்னைப் பெண் மறுத்துள்ளார். இந்த நிலையில் டாக்டர் முகமது சலீமின் சகோதரர் ஆசீப் என்று கூறி அழைப்பெடுத்த ஒரு நபர், 'எனது சகோதரர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இந்த பணத்தை நீங்கள் செலுத்தவில்லை என்றால் சட்டரீதியான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்' என்று மிரட்ட, இந்தப் பெண் பயந்துபோய் ரூபா 95,000 ஐயும் அவர்கள் குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் செலுத்தியுள்ளார்.

இதே பாணியில் மேலும் ரூபா. 20,000 ஐயும் அவர்கள் வாங்கியுள்ளனர். இந்த நிலையில் டாக்டர் முகமது சலீம் நெதர்லாந்து நாட்டிலிருந்து இந்தியா வருவதற்கு விமானப் பயணக் கட்டணமாக ரூபா.50,000 அனுப்ப வேண்டும் என்று கேட்டுள்ளனர். கையில் பணம் இல்லாததால் நகையை அடமானம் வைத்து அந்தப் பெண் அனுப்பியிருக்கிறார்.



மீண்டும் அவர்கள் தொடர்பு கொண்டு, நெதர்லாந்து நாட்டில் இருந்து டாக்டர் முகமது சலீம் கடந்த ஜூலை 17 ஆம் திகதி டெல்லி விமான நிலையத்துக்கு வந்துவிட்டார் எனவும், ஆனால் அவர் இந்தியாவில் நுழைவதற்கு தேவையான அனுமதி அட்டை இல்லை என்பதால், அதற்கு ரூபா ஒரு லட்சத்து 35 ஆயிரம் பணம் அனுப்ப வேண்டும் எனவும் இல்லையெனில் அவர் 14 நாள்கள் சிறையில் இருக்க நேரிடும் என்றும் கூறியுள்ளனர். 'நீங்கள் கைப்பேசியில் இருக்கும் இடத்தை அடையாளப் படுத்துங்கள் பணம் அனுப்புகிறேன்' என்று பதிலளித்தவுடன் இவரது எண்ணை தங்களது கைப்பேசியை தொடர்புகொள்ளாதவாறு தடை செய்துள்ளனர்.

வெளிநாட்டு மாப்பிள்ளை மோகத்தில் லட்சக்கணக்கில் பணத்தை இழந்ததை சென்னை பெண் உணர்ந்து கொண்டு, நெதலார்ந்து டாக்டர் என்று போலி விளம்பரம் கொடுத்து திருமணம் செய்கிறேன் எனக் கூறி தன்னை திட்டமிட்டு ஏமாற்றிய கும்பல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பெண் சென்னை பொலிஸ் கமிஷ்னர் அலுவலகத்தில் கடந்த ஜூலை மாதம் புகார் அளித்திருந்தார். இந்தப் புகார் மனுவுடன் தன்னிடம் பணம் மோசடிசெய்யப்பட்டமை தொடர்பான வங்கிக் கணக்கு ஆவணங்களையும், மோசடிக்கும்பலைச் சேர்ந்தவர்கள் பேசிய கைப்பேசி, 'வாட்ஸ்–அப்' எண் போன்ற விவரங்களையும் கொடுத்திருந்தார்.

இந்தப்புகார் மனு மீது உடனடியாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கும்படி மத்திய குற்றப்பிரிவு பொலிஸாருக்கு கமிஷ்னர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டதையடுத்து, மத்திய குற்றப்பிரிவு 'சைபர் கிரைம்' பொலிஸார் இந்த மோசடிக் கும்பலைச் சேர்ந்தவர்கள் டெல்லி உத்தம் நகரில் தங்கி இருக்கின்றனர் எனக் கண்டறிந்தனர். இதையடுத்து அவர்களை மும்பை பொலிஸ் உதவியோடு அதிரடியாக கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது அறியவந்ததோடு, அவர்களிடம் இருந்து கைப்பேசிகள், மடிக்கணினிகள், வங்கிக் கணக்கு அட்டைகள், ஒருதொகைப் பணம் போன்றவற்றையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட நைஜீரியர்கள் பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலத்தில், 'பேஸ்–புக்' போன்ற சமூகவலைத்தளங்களில் வெளிநாட்டு டாக்டர்கள், தொழிலதிபர்கள் போன்றவர்களது கணக்குகளில் உள்ள படங்கள் மற்றும் அவர்களுடைய தகவல்களைத் திருடி, திருமண இணையத்தளங்களில் போலியான பெயர்களில் பதிவு செய்து கொள்வதும், அதன் மூலம் வெளிநாட்டு மாப்பிள்ளை மோகத்தில் இருக்கும் பெண்களிடம் ஆசையைத் தூண்டியும், பரிசுப்பொருள்கள் அனுப்பி வைத்திருக்கிறோம் என்று பொய் சொல்லியும் கொஞ்சம், கொஞ்சமாக பணத்தை பறிப்பதும் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு மாப்பிள்ளை என்று நம்ப வைப்பதற்காக இணைய வழி தொழிநுட்ப அழைப்பு உதவியோடு வெளிநாட்டு எண்களில் இருந்து தொடர்பு கொள்வதாகவும், தங்களது இந்த மோசடி வலையில் பல பெண்கள் வீழ்ந்துள்ளனர் எனவும் கைது செய்யப்பட்ட நபர்கள் தகவல் வழங்கியுள்ளனர். இந்த வழக்கில் மேலும் சிலருக்கு தொடர்பு இருக்கலாம் என்று தெரிவதாகவும், விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருமணத்துக்காக இணையத்தளங்களில் பதிவு செய்யும் படங்கள், அவற்றிலுள்ள தகவல்களின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளாமல் தனிப்பட்ட கைப்பேசி எண், 'வாட்ஸ்–அப்' எண் போன்ற விவரங்களை அடையாளமில்லாத நபர்களிடம் பகிர வேண்டாம் என்றும், நேரில் பார்க்காமலும், தீரவிசாரிக்காமலும் எக்காரணத்தைக் கொண்டும் பணம் எதுவும் கொடுக் கக்கூடாது என்றும், பரிசுப்பொதி என்று ஆசை வார்த்தை காட்டினாலும் அவதானமாக இருக்க வேண்டும் என்று சென்னை பொலிஸ் கமிஷ்னர் சங்கர் ஜிவால் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நீதிமன்ற பணியிடத்துக்கு சிபாரிசு; தமிழக அமைச்சர் வீட்டில் அறிவித்தல்

தமிழகத்தில் உள்ள கீழமை நீதிமன்றங்களில் 3,557 பணியிடங்கள் இருக்கின்றன என அறிவிப்பு வெளியானது.

இதனைத் தொடர்ந்து காலியாயுள்ள பணியிடங்களுக்கு தேர்வு செய்வதற்கு கடந்த மாதம் தமிழகம் முழுவதும் எழுத்துத் தேர்வு நடைபெற்றது. இதற்கிடையில், புதுக்கோட்டையைச் சேர்ந்த மாநில சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதியிடம் பரிந்துரைக் கடிதம் பெற்று, குறித்த அரசுப் பணியிடத்தைப் பெறுவதற்கு நேரடியாகவும், கட்சிப் பிரமுகர்கள் வழியாகவும் பலர் முயற்சி செய்து வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகின. இதையறிந்த அமைச்சர் ரகுபதி, அவர்களிடம், இது போன்று யாரும் தன்னிடம் பரிந்துரைக் கடிதம் கேட்டு வரவேண்டாம் என்றும் நீதிபதிகளை உள்ளடக்கிய தேர்வுக் குழுவினரே பணியாளர்களைத் தெரிவு செய்கின்றனர் என்றும் கூறினார் எனத் தெரிகிறது.

இந்த நிலையில் புதுக்கோட்டை கிழக்கு இரண்டாம் வீதியில் உள்ள அமைச்சர் ரகுபதி வீட்டின் முன்பும் இது குறித்து அறிவித்தல் ஒன்று ஒட்டப்பட்டுள்ளது. அதில், 'உயர்நீதிமன்ற வேலை குறித்து அமைச்சரைச் சந்திக்க யாரும் அணுக வேண்டாம். அப்பணி முழுமையாக உயர்நீதிமன்றக் கட்டுப்பாட்டில் நடைபெறுகிறது' என குறிப்பிடப்பட்டுள்ளது.

## விநாயகர் சதுர்த்திக் கொண்டாட்டங்களுக்கு

# தமிழகத்தில் தடை; புதுச்சேரியில் அனுமதி

இந்தியா முழுவதும் வருகிற 10 ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படவுள்ளது. கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு பொது இடங்களில் சிலைகளை வைத்து வழிபட தடை விதிப்பதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு தமிழக அரசு அறிவித்தது. விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர் நிலைகளில் கரைப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. பொதுமக்கள் தங்களது வீடுகளில் மட்டுமே விநாயகர் சதுர்த்தியை கொண்டாடவும் அறிவுறுத்தப்பட்டது.

தனி நபர்கள் தங்களது வீடுகளில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபடவும், அருகில் உள்ள நீர்நிலைகளில் தனிநபராகச் சென்று சிலைகளைக் கரைப்பதற்கு அனுமதிக்கப்படுவதாகவும் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அரசின் வழிமுறைகளை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தமிழக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் புதுச்சேரியில் பொது இடங்களில் விநாயகர் சிலை வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அம்மாநில துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பு விதிகளை பின்பற்றி மக்கள் விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட வேண்டும் என்றும், தெலுங்கானாவில் அறிவிக்கப்பட்டுள்ளதைப் போன்று புதுச்சேரியிலும் விநாயகர் சதுர்த்திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிழக்கில் கொரோனா உச்சம் இதுவரை 751 பேர் உயிரிழப்பு

கிழக்கு மாகாணத்தில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 750 ஐத் தாண்டியுள்ளது. இதுவரை 751 மரணங்கள் சம்பவித்துள்ளன என்று ,கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

இதுவரை திருமலை மாவட்டத்தில் அதிகூடிய 263பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 251 பேரும் , கல்முனையில் 148பேரும் ,அம்பாறையில் 89 பேரும் மரணித்துள்ளனர்.

வழமைக்கு மாறாக கடந்த ஓகஸ்ட் மாதத்தில் தொற்றுகளும் மரணங்களும் நான்கு மடங்காக அதிகரித்துக் காணப்பட்டன.

நேற்றுவரை 44,435 தொற்றுக்களும் ,751மரணங்களும் நிகழ்ந்துள்ளன. தற்போது வழங்கப்படும் தடுப்பூசியின் பின்னர் இத்தொகை குறையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கில் அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக தெஹியத்தகண்டிய, களுவாஞ்சிக்குடி, உஹன, அம்பாறை, மட்டக்களப்பு, தமன, மகாஓயா ஆகிய பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் 468பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள்.10மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

கிழக்கில் முதலாவது தடுப்பூசிகள் வழங்க 909,520 கிடைத்தன. அதில் 833,500 ஏற்றப்பட்டன. அதாவது 84 வீதமானவர்களுக்கு ஏற்றப்பட்டன. அதில் கூடுதலாக கல்முனை மட்டக்களப்பு சுகாதாரப்பிரிவுகளில் 94 வீதமானவர்களுக்கும் திருமலையில் 81வீதமானவர்களுக்கும் அம்பாறையில் 60 வீதமானவர்களுக்கும் முதலாவது தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

இரண்டாவதாக வழங்க 6,39,600 தடுப்பூசிகள் கிடைத்தன. அதில் நேற்று வரை 49வீதமானவர்களுக்க ஏற்றப்பட்டுள்ளன. அடுத்தவாரமளவில் இரண்டாம் கட்ட இரண்டாவது தடுப்பூசிகள் ஏற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது



## மட்டக்களப்பில் மின்னியல் தகனசாலை நிறுவுமாறு கோரிக்கை விடுத்து மட்டு மாநகர முதல்வருக்கு கடிதம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாவினால்உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய பொலன்னறுவை மாவட்டத்துக்கு பல்வேறு அசௌகரியங்கள் மத்தியில் கொண்டு செல்லவேண்டியுள்ளது எனவே மாவட்டத்தில் மின்னியல் தகனசாலை ஒன்றை நிறுவுமாறு கோரிக்கை விடுத்து மட்டு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி கலாறஞ்சனி மட்டு மாநகரசபை முதல்வருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.



மட்டு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி கலாறஞ்சனி கடந்த முதலாம் திகதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது–

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல மரணங்கள் சம்பவித்துள்ளன .

இந்த வகையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து இதுவரை கொரோனா தொற்றினால் மரணித்த 202 மரணங்களில் 27 உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்யப்பட்டுள்ளது.

இச் சடலங்கள் தகனம் செய்வதற்கு மட்டக்களப்பில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள மின்னியல் தகனசாலைக்கு தகனம் செய்ய கொண்டு செல்லவேண்டியுள்ளது.

அதேவேளை இவ்விடயம் தொடர்பாக பொலன்னறுவை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பொதுச் சுகாதாரப்பரிசோதகர்ஆகியோரின் முன் அனுமதி பெறவேண்டியதுடன் மின்னியல் தகனம் மேற்கொள்வதற்காக திம்புலாகலை பிரதேச சபையிடமிருந்து அனுமதியைப் பெற்று அதன் பின்னரே குறித்த உடலத்தை தகனம்செய்ய அனுப்பவேண்டியுள்ளது.

தகனம் செய்வதற்கு சடலம் ஒன்றை அனுப்புவதற்கு சடலத்தைஏற்றிச்செல்வதற்கு ஒரு வாகனம் அச் சடலத்தினை இறக்கி உரிய தகனச்சாலைக்கு கொண்டு சென்று கொடுப்பதற்காக வைத்தியசாலை ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்காக பிறிதொரு வாகனம் அத்துடன் இரு சாரதிகள் மற்றும் 6 உதவியாளர்கள் என ஆளணிகளும் ஒழுங்கு செய்ய வேண்டியுள்ளது.

தற்போது காணப்படும் இந்த தொற்று நோய் காரணமாக வைத்தியசாலையின் ஊழியர்கள் வரவில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் உரிய நேரத்துக்கு உரிய உடல்களை தகனம் செய்வதற்காக அனுப்பி வைப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையின் பிரேத அறையிலும் இடப்பற்றாக்குறை ஏற்படுகின்றது.

எனவே நிலைமையை கருத்தில் கொண்டு எமது மாவட்டத்தில் மரணித்தவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு மின்னியல் தகனசாலை ஒன்றை நிறுவுவதற்கு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஏறாவூரில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது




மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தளவாய் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வியாபாரத்துக்கா கஞ்சாவை எடுத்துச் சென்ற 24 வயதுடைய இளைஞர் ஒருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலையில் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 90 கிராம் கேரளா கஞ்சாவையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டு ஒப்படைத்துள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் சம்பவதினமான நேற்று மாலை 6.30 மணிக்கு குறித்த பகுதியில் உள்ள பாடசாலைக்கு அருகில் வீதியில் வைத்து மோட்டார்சைக்கிளில் கஞ்சாவை வியாபாரத்துக்கு எடுத்துச் சென்ற இளைஞனை மடக்கிபிடித்தனர். இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## திருக்கோவில் பொலிஸாரால் மூன்று குண்டுகள் மீட்பு

திருக்கோவில்பொலிஸ் பிரிவில் மோட்டார் குண்டு ஒன்றும் இரண்டு கை குண்டுகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கவேலாயுதபுரம் மற்றும் பாவட்டாறுபஸ் வயல் பிரதேசத்தில் இருந்து கைக் குண்டுகள் மற்றும் ஒரு மோட்டார் ரக குண்டுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்களின்ஊடாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் ஊடாக சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்ற திருக்கோவில் பொலிஸ் குழுவினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் குண்டுகளை கைப்பற்றி இருந்தனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டு இருந்த அதேவேளை நேற்று மாலை ஒரு மோட் டார் ரக குண்டு பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டுகள் நீதிமன்ற உத்திரவின் பிரகாரம் இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் நேற்று காலை செயலிழக்கச் செய்யப்பட்டன எனப் படைதரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமிருந்த இடத்தில் இரண்டு துப்பாக்கிகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன

அம்பாறை கஞ்சிகுடிச்சாற்றில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமாக இருந்த பகுதியில் எல்.எம்.ஜீ, துப்பாக்கி மற்றும் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளோம்எனதிருக்கோவில்பொலிஸார்தெரிவித்தனர்.

விசேட புலனாய்வு பிரிவு திருக்கோவில் பிரதேச பெறுப்பாளருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து திருக்கோவில் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எஸ்.எஸ்.எஸ். சமந்த தலைமையிலான பொலிஸார் விசேட புலனாய்வு பிரிவினர் சம்பவதினமான நேற்று பிற்பகல் கஞ்சிக்குடிசாற்றில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமாக இருந்த பகுதியில் இருந்த மலசல கூடத்துக்கு அருகில் கைவிடப்பட்டு துருப்பிடித்த எல்.எம்.ஜீ ரக துப்பாக்கி ஒன்றை மீட்டனர். அதேவேளை அந்த பகுதியிலுள்ள மலைகுகையில் இருந்து உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி இரண்டையும் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட துப்பாக்கிகள் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.











# டோக்கியோ பாரா ஒலிம்பிக் நிறைவு பதக்கப்பட்டியலில் சீனா முதலிடம்

டோக்கியோ பாரா ஒலிம்பிக் தொடர் கண்கவர் கலைநிகழ்ச்சிகளுடன் நேற்று நிறைவடைந்தது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் பாரா ஒலிம்பிக் தொடர் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தத் தொடரில் சீனா, அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, இலங்கை உட்பட 163 நாடுகள் பங்கேற்றன.

போட்டிகளிகளின் நிறைவில் பதக்கப்பட்டியலில் சீனா 96 தங்கம், 60 வெள்ளி, 51 வெண்கலப் பதக்கங்களோடு முதலிடத்தையும், பிரித்தானியா 41 தங்கம், 38 வெள்ளி, 45 வெண்கலப் பதக்கங்களோடு இரண்டாமிடத்தையும், அமெரிக்கா 37 தங்கம், 36 வெள்ளி, 31 வெண்கலப் பதக்கங்களோடு மூன்றாமிடத்தையும் வகிக்கின்றன. ரஷ்யக் குழு 36, நெதர்லாந்து 25, உக்ரேய்ன் 24, பிரேஸில் 22, ஆஸ்திரேலியா 21, இத்தாலி 14 தங்கப்பதக்கங்களோடு அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியா 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று 24 ஆவதிடத்தி லும், இலங்கை தலா ஒரு தங்கம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று 57 ஆவது இடத்திலுமிருக்கின்றன.

12 நாள்கள் நடந்த போட்டிகளின் நிறைவு விழா வாண வேடிக்கைகளுடன் பார்வையாளர்களைக் கவரும் வகையில் வண்ணமயமான நிகழ்ச்சியாக அமைந்தது. ஜப்பான் தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்ற நிறைவு விழாவுக்கு பட்டத்து இளவரசர் அகிஷினோ தலைமை தாங்கியிருந்தார். அடுத்த பாரா ஒலிம்பிக் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் வரும் 2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28 ஆம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் காலிறுதிக்கு முன்னேறினார் மெட்வடேவ்



நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் நடந்த நான்காவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக வரிசைத் தரப்படுத்தலில் இரண்டாவதாகவுள்ள வீரரான ரஷ்யாவின் டெனில் மெட்வடேவும், பிரிட்டனின் டேன் இவான்சும் மோதினார்கள்.

ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடிய மெட்வடேவ், முதல் செட்டை 6-3 என கைப்பற்றினார். தொடர்ந்து இரண்டாவது செட்டை 6-4, மூன்றாவது செட்டை 6-3 என கைப்பற்றி அசத்தினார். மொத்தத்தில் 6-3, 6-4, 6-3 என்ற நேர் செட்களில் இந்தப் போட்டியில் வென்று அவர் காலிறுதிக்கு முன்னேறினார்.

# இந்திய - இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் பரபரப்பான இறுதி நாள் ஆட்டம் இன்று

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 191 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதையடுத்து, தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய இங்கிலாந்து அணி 290 ஓட்டங்களை எடுத்து, இந்திய அணியைவிட 99 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

தனது இரண்டாவது இன்னிங்ஸை சிறப்பாக ஆரம்பித்த இந்திய அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 466 ஓட்டங்களைச் சேர்த்தது. ரோகித் சர்மா 127, புஜாரா 61, ஷடர்துல் தாக்கூர் 60, ரிஷப் பண்ட் 50, கே.எல்.ராகுல் 46, விராட் கோலி 44 ஓட்டங்களை எடுத்தனர். ரோகித் சர்மா வெளிநாட்டு ஆடுகளமொன்றில் தனது முதலாவது சதத்தைப் பெற்றார். இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்தை விட 367 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது இந்திய அணி.

அதன் பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நான்காம் நாள் ஆட்டம் நிறைவு பெற்ற போது விக்கெட் இழப்பின்றி 77 ஓட்டங்களை எடுத்திருந்தது. வெற்றிபெற இன்னும் 291 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இங்கிலாந்தும், 10 விக்கெட்டுகளை கைப்பற்றும் நோக்குடன் இந்தியாவும், ஐந்தாவதும் இறுதியுமான நாளான இன்று விளையாடுகின்றன.





# இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ராகுலுக்கு ஒழுக்காற்று நடவடிக்கையாக அபராதம் விதிப்பு

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் ஓவலில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தின்போது அன்டர்சன் வீசிய ஓவரில் கே.எல்.ராகுல் 46 ஓட்டங்களை எடுத்திருந்தபோது விக்கெட் காப்பாளர் பெயர்ஸ்டோவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தப் பிடி எடுக்கப்பட்ட விதம் சர்ச்சையானதையடுத்து மூன்றாவது நடுவரின் முடிவுக்கு ராகுல் விண்ணப்பித்தார். மூன்றாவது நடுவரும் வீடியோக்களை ஆய்வு செய்து ராகுலுக்கு ஆட்டமிழப்பையே தீர்ப்பாக வழங்கினார். இதைக் கள நடுவர் அறிவித்ததும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ராகுல் நடுவரிடம் வாக்குவாதம் செய்துவிட்டே ஆடுகளத்தை விட்டுப் புறப்பட்டார்.

நடுவரின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரிடம் வாக்குவாதம் செய்த ராகுலின் செயல் ஐ.சி.சி. ஒழுக்க விதிகளுக்கு முரணானது என்பதால் ராகுல் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.சி.சி. வெளியிட்ட தகவலில், 'ஐ.சி.சி.யின் ஒழுக்க விதிகள் நிலை ஒன்றின் கீழாக சர்வதேசப் போட்டியின்போது, நடுவரின் முடிவுக்குக் கீழ்ப்படியாமல் எதிர்ப்புத் தெரிவிக்கும் வீரர்கள் ஒழுக்க விதிகளை மீறியதாகக் கருதப்படுவர். அந்தத் தவறை இந்திய அணியின் வீரர் கே.எல்.ராகுல் செய்துள்ளார். விசாரணையின் போது அந்தத் தவறை அவர் ஒப்புக்கொண்டமையையடுத்து அவருக்குக் குறைந்த பட்ச தண்டனையாக போட்டி ஊதியத்திலிருந்து 15 சதவீதம் அபராதமாக விதிக்கப்படுகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லங்கா பிறீமியர் லீக் 2021 தொடர் தம்புள்ளை அணியின் பெயர் மாற்றம்

லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில் தம்புள்ளை நகரினை மையமாகக் கொண்டு பங்கேற்கும் தம்புள்ளை வைகிங்ஸ் அணியின் பெயர் தம்புள்ளை ஜயன்ட்ஸ் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஐந்து அணிகள் பங்குபெறும் எல்.பி.எல். தொடரின் இரண்டாவது பருவகாலத்திற்கான போட்டிகள் இந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ள நிலையில் இந்தப் பெயர்மாற்றம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரித்தானியாவை மையப்படுத்தி இயங்கும் ஹம்ரோ என்ற நிறுவனத்தினைச் சேர்ந்த கமர் கான், இந்த அணியின் உரிமையை வாங்கிய பின்னரே இந்தப் பெயர் மாற்றம் நடைபெற்றுள்ளது. தசுன் ஷானக தலைமையிலான தம்புள்ளை வைகிங்ஸ் அணி பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கும் விடயத்தினை லங்கா பிறீமியர் லீக் தொடரின் ஏற்பாட்டாளர்களான ஐ.பி.ஜி. நிறுவனம் உறுதி செய்துள்ளது.



# 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு புதுக்குடியிருப்பில் தடுப்பூசிகள்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்களுக்குச் சென்று 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமக்கான இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

ஏற்கனவே தடுப்பூசி வழங்கப்பட்ட சிறீசுப்பிரமணிய வித்தியாலயம், தேவிபுரம் வைத்தியசாலை, மூங்கிலாறு வைத்தியசாலை, பாரதிபுரம் பாடசாலை ஆகிய நிலையங்களில் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நான்கு நாள்கள் (6,7,8,9) தொடர் தடுப்பூசி வழங்கப்பட இருப்பதாகச் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# பதுக்கப்பட்ட நெல், சீனி பொருள்கள் மீட்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படும்!

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்

சட்டத்துக்கு முரணான வகையில் சேகரிக்கப்பட்டுள்ள நெல், சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை மீட்டு அவற்றை மக்களுக்கு நிவாரண விலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் எம். டீ. எஸ். பி. நிவுன்ஹெல்ல தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் இது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகத் தனக்கு தொடர்ச்சியாக அறியத் தருமாறும் மேஜர் ஜெனரல் எம். டீ. எஸ். பி. நிவுன்ஹெல்ல உரியஅதிகாரிகளுக்குபணிப்புரை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர், சகல மாவட்ட அதிபர்கள், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்டோருக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

நெல், அரிசி மற்றும் சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருள்களை பதுக்குதல், விநியோகத்தை தவிர்த்தல், அதிக விலைக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் செயற்பாடுகளையும் தடுப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மக்கள் கட்டளை சட்டத்தின் 5 ஆம் உறுப்புரையின் கீழ் அறிவித்தலொன்றை விடுத்துள்ளார்.

அதற்கமைய சட்டத்துக்குப் புறம்பாக இவற்றை பதுக்கி வைத்துள்ளமை இனங்காணப்பட்டால், அவற்றை கைப்பற்றி மக்களுக்கு நியாயமான விலைக்கு விநியோகிப்பதற்கு சகல மாவட்ட அதிபர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# கொவிட் சடலம் தகனத்தின் போது வெளியேறும் புகையால் அசௌகரியம்

## வவுனியா மக்கள் குற்றச்சாட்டு

வவுனியாவில் கொரோனா சடலங்களை தகனம் செய்யும்போது வெளியேறும் புகையால் அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றோம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள நகரசபைக்குச் சொந்தமான மயானத்தில் கொரோனா நோய்தொற்றுக்கு உள்ளாகி இறப்பவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

அதனைத் தகனம் செய்யும்போது வெளிச்செல்லும் புகையால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றோம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த மயனாத்தில் எரிவாயு மூலம் சடலங்களைத் தகனம் செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் சடலங்களை தகனம் செய்யும்போது அதன் புகை வெளியேறுவதற்காக பொருத்தப்பட்டுள்ள புகைபோக்கும் கோபுரம் உயரம் குறைவாகக் காணப்படுவதால் அதனூடாக வெளிச்செல்லும் புகை அந்த பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிக்குச் செல்வதுடன், அந்த வீதியைப் பயன்படுத்துபவர்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

இதனால் குறித்த பகுதியில் துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே குறித்த புகைபோக்கும் கோபுரத்தைத் தற்போது இருக்கும் உயரத்தைவிட மேலும் அதிகரிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பிரதேசசபை தவிசாளர் மீது பெண் ஒருவர் கத்திக்குத்து

கேகாலை, தெரனியகல பிரதேச சபைத் தலைவரை பெண் ஒருவர் கத்தியால் வெட்டிய சம்பவத்தால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த தெரனியகல பிரதேச சபைத் தலைவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தெரனியகல சந்தைக்கு அருகில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தெரனியகல பிரதேச சபை தலைவர் பயணித்த வாகனம் கடை ஒன்றுக்கு அருகில் நிறுத்திய போது அவருக்கு நெருக்கமான ஆதரவாளரான பெண் ஒருவர் அவ்விடத்திற்கு வருகைத்தந்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கலந்துரையாடலுக்கு இடையில் திடீரென பெண் கத்தியை எடுத்து குத்த முயற்சித்துள்ளார். எனினும் அதனைத் தடுக்க அவர் முயற்சித்த போது மூக்கில் பாரிய வெட்டு காயம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கான காரணம் இதுவரையில் தெரியவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# 53 வயதான குடும்பஸ்தர் குத்திக் கொடூரக்கொலை

*குருவிட்ட, தெப்பானவ பகுதியில் 53 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.*

*இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.*

*சம்பவத்துடன்தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் நீண்ட காலமாக இருவருக்கு இடையில் இடம்பெற்று வந்த கருத்து வேறுபாடே கொலைக்கான காரணம் எனக்கண்டறியப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக இரத்தினபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை குருவிட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# அரசு வழங்கிய பணத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கி தியாகம் செய்த பின்தங்கிய கிராம மக்கள்!

## அனுராதபுரத்தில் அதிசயம்

அனுராதபுரத்தில் மிகவும் பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பணத்தை கொவிட் நிதியத்துக்காக தியாகம் செய்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக தினசரி வருமானத்தை இழந்த குடும்பங்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அவர்கள் இவ்வாறு கொவிட் நிதியத்துக்காக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மிகவும் கடினமான சூழலில் தங்கள் வாழ்க்கையை நடத்தும் குடும்பத்தினரே இவ்வாறு தங்களுக்கு கிடைத்த கொடுப்பனவை தியாகம் செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

அனுராதபுரம், தலாவ, ஹங்குரங்கெத்த பிரிவின் அருனபுர கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு அவர்கள் இந்த கொடுப்பனவை கொவிட் நிதியத்திற்கு வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமைய அருனபுர கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மேலும் சில உதவிகளை சேர்த்து அதனை கொவிட் நிதியத்திற்கு வழங்கியுள்ளனர்.

நெருக்கடியான காலத்தில் மிகவும் பின்தங்கி கிராம மக்களின் செயற்பாடு ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2021இல் வெளியிடப்பெற்றது.